[20th March 1965

வந்து கொடுத்தால், சாக்கு உட்பட போட்டுக் கொடுத்தால், மாக்ஸிமம் ப்ரைஸ் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அஸெம்ப்ளிங் பாயிண்டில் கொடுத்தால் ஸப்போர்ட் ப்ரைஸ்தான் கொடுப்பார்கள். இந்த நிலைமை விவசாயிகளுக்குச் சாதகமானதுதான்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : கூட்டுறவு ஸ்தாபனங்களும், லைசென்ஸ் பெற்ற வியாபாரிகளும் ஓரளவுக்கு அதிகமாகக் கொள்முதல் செய்வதற்குப் பணம் புரட்ட முடியாத காரணத்தினால் கொள்முதல் செய்வதிலே தயக்கம் ஏற்படுகிறது. கிராமப்புறங்களில் உள்ள எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் இன்ன கூட்டுறவு சங்கங்கள் செய்ய வேண்டும் என்ற நியதியை ஒதுக்கி வைத்து—பண வசதி இருக்கின்ற சிறிய பெரிய சங்கங்களெல்லாம் எங்கெல்லாம் கிடைக்கிறதோ அங்கெல்லாம் அவர்கள் கொள்முதல் செய்யக் கட்டளையிட இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : எல்லாச் சங்கங்களும் இதிலே ஈடுபட உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலேதான் எந்தெந்த சங்கங்களை ஏஜெண்டுகளாக நியமிக்கவில்லையோ அதையெல்லாம் நியமிக்கலாம் என்று கூட்டுறவு ரிஜிஸ்ட்ராருக்கு ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் அதிலே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவு சங்கங்களோ, வியாபாரிகளோ மொத்தமாக வாங்கப் போதுமான மூலதனம் இல்லாததை உணர்ந்து அரசாங்கமே வாங்க முன் வந்திருக்கிறது.

உணவுத்துறை நிர்வாகச் சீரமைப்பு

* 288 **கேள்வி—திரு. மு. கருணாநிதி :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

உணவுத்துறை நிர்வாகத்தைச் சீரமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

THE HON. SRI V. RAMAIAH : Recently, with a view to strengthen the Food and Agriculture Secretariat, a Member of the Board of Revenue was posted as Secretary to Government, Food and Agriculture Department in addition to his duties as Commissioner of Civil Supplies and Commissioner of Food Production.

The Civil Supplies Department is being strengthened and necessary additions to the staff are being made according to requirements as the situation develops.

At the present moment there is no specific scheme for reorganisation of Civil Supplies Department under consideration of the Government. The matter, however, will be reviewed whenever necessary appropriate steps taken by the Government.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், தஞ்சாவூர் மாவட்டத்தில் ரெயில்வே வாகன்கள் கிடைக்காமல் மூட்டைகள் ஆயிரக்கணக்கில் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. போதுமான வாகன்கள் கிடைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தஞ்சை ஜில்லாவிலே, அங்கு இருக்கக்கூடிய பழைய நினைப்பு, இப்போது வாகன்கள் வந்தால் பிரச்னை தீரும் என்று நினைக்கிறார்கள். வாகன்கள் வந்தால் மட்டும் பிரச்னை தீராது. இப்போது ஃப்ரீ மார்க்கெட் இல்லை. வாகன்களில் ஏற்றி எந்த ராஜ்யத்திற்காவது அனுப்ப முடியாது. இப்போது இருக்கின்ற கொள்கைப்படி எல்லா நெல்லையும் அரசாங்கமோ அல்லது அரசாங்கம் நியமித்திருக்கிற ஏஜெண்டுகளோ வாங்க வேண்டும். அங்கே அப்படி வாங்குவதில் ஓரளவுக்குத் தேக்கம் ஏற்பட்டது. அங்கு எப்படி என்றால் பெரும் பகுதி நெல் ஒன்றிரண்டு மாதங்களில் விற்பனை ஆகவேண்டும். அரசாங்கம் போதுமான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, தஞ்சை ஜில்லா

20th March 1965]

அடுத்து இருக்கக்கூடிய திருச்சி ஜில்லா, இந்த இடங்களில் $1\frac{1}{2}$ லட்சம் டன் அளவுக்குச் சேமித்து வைக்கும் கிடங்குகள் தயாராகியிருக்கின்றன. மேலும் இருக்கின்ற நிலைமையிலே அண்டை ராஜ்யங்களுக்கு நிர்ணயம் செய்து கொடுக்க வேண்டியதை அனுப்பிக் கொண்டிருக்கிறோம். போக்கு வரத்தில் ஏற்படும் கஷ்டத்தைப் பார்க்காமல் சென்னைக்குத் தேவையான நெல்லை ஆவடியில் கொண்டு வந்து சேமித்து வைத்திருக்கிறோம். உபரி யாக இருக்கிற நெல்லை அதிகம் சேர்த்து வைக்கக் கூடாது என்று கேர ளத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று இருக்கின்ற அந்த அளவில் கிட்டத் தட்ட 20,000 டன் அனுப்பலாம் என்று அனுப்பிக் கொண்டிருக்கிறோம். அங்கு இருக்கிற நிலையிலே இப்போது தஞ்சை ஜில்லா விவசாயிகளுக்கு நான் சொல்லுவதெல்லாம், ஸப்போர்ட் ப்ரைஸை அரசாங்கம் கண்டிப்பாக அவர்களுக்குக் கொடுக்கும். வாங்குவதில் 10—15 நாட்கள் தாமதம் ஏற்பட்டால் அதை அவர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். அங்கு சாதாரணமாக இருக்ககூடிய முறையில் அறுவடை காலத்தில் வியாபாரிகள் வாங்கும் நிலை, விலையைக் குறைத்து வாங்கும் நிலை இன்றைக்கு இல்லை. ஆகையால் அவர்களுடைய நெல்லை அரசாங்கம் நிச்சயமாக எடுத்துக் கொண்டு ஸப்போர்ட் ப்ரைஸைக் கொடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த உணவுத்துறை நிர்வாகத்தைச் சீரமைக்கும் திட்டத்தின் கீழ்தான் கனம் திரு. மன்றாடியாரிடத்திலிருந்து இந்த உணவுத்துறை தற்போது உணவு அமைச்சராக இருக்கிறவரிடம் மாற்றப்பட்டதா ? அப்படி மாற்றிய மைக்கப்படுவதற்குரிய பிரத்தியேகமான காரணங்கள் என்ன என்று சொல்ல முடியுமா ?

(பதில் இல்லை).

திரு. கி. இரா. சம்பந்தம் : தஞ்சை ஜில்லாவிலே இப்போது நெல்லை வாங்காமல் இருப்பதற்கு, ஸ்டேட் பாங்கில் கொடுக்கப்பட்ட ஓவர்டிராஃப்ட் எல்லாம் பாதிக்கு மேல் நிறுத்தப்பட்டு, ஓவர்டிராஃப்ட் கிடைக்காததன் காரணமாகத்தான் வியாபாரிகள் நெல்லைப் பிடிக்கவில்லை என்று சொல்லு கிறார்கள். அதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : பாங்குகளில் வியாபாரிகளுக்குக் கொடுத்த ஓவர்டிராஃப்ட்டைக் குறைத்திருப்பதாகத் தஞ்சைக்குப் போன போது சொன்னார்கள். நேற்றையதினம் சிவில் சப்ளை கமிஷனர் தஞ்சைக் குப் போயிருக்கிறார். இதையெல்லாம் பற்றி விசாரித்து, ஏதாவது குறை பாடுகள் இருக்குமானால் அவைகளைப் போக்க அவர்கள் என்ன ஆலோசனை சொல்லுகிறார்களோ அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. செ. சீனிவாசன் : ஸார், இந்தத் தேக்கம் ஏற்பட்டதற்குக் கார ணம் வியாபாரிகளிடத்திலே இருக்கின்ற பண முடக்கம் தான். கிராமப் புறங்களில் அதிக அளவில் வில்லேஜ் கோவாப்பரேடிவ் சொஸைட்டீஸ் இருக்கின்றன. அவைகள் மூலமாக, பற்றுக்குறை ஜில்லாக்களில் இருக் கின்றவர்கள் போய்க் கொள்முதல் செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுப் பார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : மற்ற ஜில்லாக்களில் இருக்கக்கூடிய வர்கள் அங்கு வந்து வாங்க வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறது. கனம் அங்கத்தினர் சொல்லியதுபோல கோவாப்பரேடிவ் சொஸைட்டிகள் ஏஜெண்டுகளை நியமனம் செய்து அனுப்பினார்கள். அவர்களிடம் பண வசதி போதுமானதாக இல்லாத காரணத்தினால் நாம் எவ்வளவு வாங்க வேண்டுமென்று எண்ணுகிறோமோ அந்த அளவுக்கு அவர்களால் வாங்க முடியவில்லை. இத்தனை கோடி ரூபாய் ஆகும் என்று கணக்கிட்டு அரசாங் கமே தலையிட்டு வாங்கி சேமித்து வைக்க முடியுமே தவிர, கூட்டுறவு சொஸைட்டிகளினாலோ, வியாபாரிகளினாலோ தீர்த்துவிடக்கூடிய பிரச்னை

அல்ல இது. வியாபாரிகள் எவ்வளவு வேகமாக வாங்கி விற்கலாம் என்று அதிலே ,அக்கறை இருக்கிறது. நமக்குத் தேவையான அளவுக்கு வாங்கு வதற்கு சர்க்காரினுல்தான் முடியும்.

திரு. கரு. சீமைச்சாமி : ஸார், கட்டாயக் கொள்முதல் சரியாக நடக்கா ததன் காரணமாக வியாபாரிகளிடம் பணம் இல்லை என்று சொல்லு கிருர்கள். சென்ற ஆண்டு வியாபாரிகளே எல்லா நெல்லையும் வாங்கி யிருக்கிருர்கள். கட்டாயக் கொள்முதல் என்ற காரணத்தினுல்தான் இது சரியாக நடக்கவில்லை என்று அமைச்சர் ஒப்புகொள்ளுகிருரா ? இதை மாற்றி அமைத்து சரியான திட்டம் போடச் சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா : அமைச்சர் ஒத்துக் கொள்வது ஒன்றும் இல்லை. நிர்ணயம் செய்திருப்பதை வாங்க முடியும். அதில் எந்த விதக் கஷ்டமும் இல்லை. இதில் எந்த விதத் தவறும் இல்லை. கனம் அங்கத்தினர் எதையாவது நினைத்துக் கொண்டு கேள்வி போட்டால் அதற்கு நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

திரு எஸ். முருகையன்: வட ஆற்காடு ஜில்லாவிலே ஒரு தாலுகாவை விட்டு இன்னொரு தாலுகாவிற்கு நெல்லோ அரிசியோ கொண்டு போகக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக ஒரு தாலுகாவிலே பணம் இல்லாத காரணத்தினுல் வியாபாரிகள் நெல்லை வாங்கவில்லை. அடுத்த தாலுகா வியாபாரிகள் வந்து வாங்கத் தயாராக இருக்கிருர்கள். அதனுலே ஒரு ஜில்லாவிலே எங்கு வேண்டுமானுலும் தாராளமாகக் கொண்டு போக அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஒரு ஜில்லாவுக்குள்ளேயே போவதிலே எவ்வளவு ஆதரவு கொடுக்க வேண்டுமோ அவ்வளவு கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். ஆனுல் சில சந்தர்ப்பங்களில் தாராள குணத்தி னுல் ஏற்படக்கூடிய விபரீதங்களைப் பார்க்கும்போது பயமாக இருக்கிறது. முதலில் ஒரு க்விண்டாலுக்கு மேல் இல்லாமல் கொண்டு போகலாம், அதற்குப் பர்மிட் வேண்டாமென்று முடிவு எடுத்திருந்தோம். தஞ்சையில் அறுவடை ஆகத் தொடங்கிய உடனே எப்படி ஒரு சில வியாபாரிகளால் அது தவருகப் பயன்படுத்தப்பட்டது என்பதை நினைத்துப் பார்க்கும் போது உண்மையிலேயே இதிலெல்லாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதைத் தவிர வேறு இல்லை. சாதாரணமாக விவசாயிகளுக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டும் என்று அல்ல. லாப அடிப்படையில் எங்கேயோ போவதைத் தடை செய்ய வேண்டும். அதற்கு வழிகளைக் கண்டுபிடிப்பதில் கஷ்டம் இருக்கிறது. வட ஆற்காடு போன்ற ஜில்லாக் களில் போதுமான அளவுக்குக் கொள்முதல் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. விவசாயிகளிடம் இருப்பதை எப்படி விற்பனை செய்வது என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சாவூர் மாவட்டத்தில் தற்சமயம் இருசால் வசூல் செய்து கொண்டிருக்கிருர்கள். இருசால் கொடுப்பதற்குச் சாதாரண மாக விவசாயிகள் 10 மூட்டை, 15 மூட்டை நெல் விற்பனை செய்து கொடுக்க வேண்டிய நிலைமைதான் இருக்கிறது. பெடரேஷனிடம் கொடுத்தாலும் பணம் இல்லை என்று சொல்லுகிருர்கள். மூவ்மெண்டு ஆபீஸரிடம் கொடுத்து வாங்குவது என்று சொன்னுல், 20 மைல் சென்று 2, 3 நாட் கள் செலவழித்து, பிறகுதான் பணம் வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு மூவ்மெண்டு ஆபீஸர் விவசாயிகளிடம் கொள்முதல் செய்து, அவர்களுக்கு உடனே ரூபாய் கொடுப்பதற்கு வேண்டிய நட வடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தஞ்சை ஜில்லாவில் இந்த விசேஷ கஷ்டம் இருப்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. இதை ஒரு சாதாரண பிரச்னையாகக் கருதி, எப்படியும் வியாபாரிகள் வாங்கிவிடுகிருர்கள் என்று அரசாங்கம் சும்மா இருந்துவிடுவதில்லை. இந்தக் கஷ்டம் அரசாங்கத்திற்குத்

20th March 1965]

தெரிந்தவுடன் அரசாங்கமே தலையிட்டு வாங்க வேண்டும், விவசாயிகளின் கஷ்டத்தைப் போக்க வேண்டும் என்றுதான் அரசாங்கம் உணர்கிறது. அதற்கு ஒரே வழி உபரியாக இருக்கும் நெல்லை அதிகாரிகளைக் கொண்டு இன்னும் தீவிரமாக அரசாங்கம் வாங்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும்.

Licences under the Madras Food Grains Control Order

* 289 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the number of applications for the grant of licences under the Madras Food Grains Control Order received upto 30th November 1964; and

(*b*) the number of licences granted till then?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) 17,650 application.

(*b*) 10,476 licences.

திரு. எம். தண்டாயுதபாணி : தனிப்பட்ட வியாபாரிகளுக்கு நாம் லைசென்ஸ் வழங்கியிருக்கிறோம். அவர்கள் வாங்கிய நெல்லை அடுத்த மாநிலத்திற்கு அனுப்புவதற்கு உத்தரவு கிடைக்கவில்லை. ஆனால், வேறு மாவட்டங்களுக்கு, கோவை, மதுரை போன்ற மாவட்டங்களுக்கு அனுப்புவதற்கு உத்தரவு கொடுத்தால் ஸ்டாக் தீர்ந்துவிடும். அவர்கள் திரும்பவும் விவசாயிகளிடம் வாங்குவதற்கு வேண்டிய நிலைமை ஏற்படும். ரூ. 23·32 என்று நிர்ணயிக்கப்பட்ட விலை கொடுக்க வேண்டுமென்ற தேவை கூட இல்லை. ரூ. 21·50 க்கு நெல்லைக் கொள் முதல் செய்து இந்தத் தேக்க நிலையைப் போக்கலாம். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் கிடங்குகள் திறக்கப்பட்டிருப்பதால், கொள் முதல் செய்த நெல்லை அரசாங்கம் அந்த இடத்தில் கொண்டுபோய் ஸ்டாக் வைத்தால், தேக்க நிலை நிவர்த்தி செய்யப்படும் என்பதை மனதில் கொண்டு, அரசாங்கம் ஆவன செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் தஞ்சை ஜில்லா உற்பத்தியாளர் என்ற முறையிலே கேள்வி போடுகிறாரோ என்று சந்தேகமாக இருக்கிறது. ரூ. 22, 21 கிடைத்தால் போதும் என்று இப்பொழுது கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்கள். கனம் அங்கத்தினரே ரூ. 17க்கு விற்கிறார்கள் என்று போன வருஷம் இந்த மன்றத்தில் குறை சொன்னது நமக்கு ஞாபகம் இருக்கிறது. விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும் என்பதுதான் உத்தேசம். அரசாங்கமே தலையிட்டு வாங்க வேண்டுமென்றுதான் நினைக்கிறோம். சென்ற வருஷமும், இந்த வருஷமும் சட்டசபையில் கனம் அங்கத்தினர்கள் என்ன சொன்னார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

திரு. ஜே. மாதா கவுடர் : சென்ற ஆண்டு செப்டம்பர்-அக்டோபர் மாதத்தில் உணவு நெருக்கடி ஏற்பட்டது. இந்த ஆண்டு செப்டம்பர்-அக்டோபர் மாதத்தில் அதேமாதிரி உணவு நெருக்கடி வராமல் இருப்பதற்கு முன்கூட்டியே என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தச் சட்டசபை நடவடிக்கை பூராவும் கவனித்துக் கொண்டிருந்தால், அதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பது தெரியவரும்.

திரு. ர. ஜீவரத்னம் : தனிப்பட்ட வியாபாரிகளானாலும் சரி, கூட்டுறவுச் சங்கங்களானாலும் சரி, நெல் கொள்முதல் செய்வதில் சற்று சுணக்கம் காணப்படுகிறது. அதற்குக் காரணம் சர்க்கார் நிர்ணயித்த விலைக்கு வாங்கவில்லை. அதனால் சில குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நெல்